**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-10042026-10713

Volume: 10

Issue: 4

Month: April

Year: 2026

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 13.02.2026

Accepted: 25.03.2026

Published: 01.04.2026

Citation:
Ezhilvalavan, C., and S. Kannadasan. "The Emotion of Weeping in the Poems of Artist M. Karunanidhi." *Shanlax International Journal of Tamil Research,* vol. 10, no. 4, 2026, pp. 23–30.

DOI:
https://doi.org/10.34293/tamil.v10i4.10713

*Corresponding Author:
esivaguhan@gmail.com

CC BY SA

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# The Emotion of Weeping in the Poems of Artist M. Karunanidhi

**C. Ezhilvalavan**
*Ph.D. Research Scholar*
*Registration No: BDU2320632780286*
*Mannar Saraboji Government College (Autonomous), Thanjavur*
*http://orcid.org/0009-0005-0426-3769*

**S. Kannadasan**
*Associate Professor, Department of Tamil*
*Mannar Saraboji Government College (Autonomous), Thanjavur*

**Abstract**

*In poetic creations, the emotions of the creator and the emotions of the characters featured in that creation are of primary importance. The emotion that the artist expresses - either through himself or through the characters — in the mode of conveying the poem, is what carries that poem to its audience. Therefore, it is said that the emotional expression found in a poem serves as the very life force of that poem. This article examines and explains the emotion of weeping expressed by artist Mu. Karunanidhi in his poems.*
***Keywords:*** *Subject Matter, Mental Impressions, Social Grievances, Internal Frustrations, Lamentation, Remorse, Grief of Separation.*

**Reference Notes**

1. Ti. Murugusundaram, Modern Poetry, p.27.
2. Ibid., p.28.
3. Bala, Pioneers of Tamil Modernism, p.166.
4. K. Vellaivaaranan (Ed.), Professor (Commentary), Tholkappiyam Meippattiyal Commentary Wealth, Vol.2, p.2.
5. Ibid.
6. Ibid.
7. Dr. S. Santhanam, Educational Psychology, p.63.
8. Artist Mu. Karunanidhi, Kalaignar's Poetry Rain, p.21.
9. Ibid., p.303.
10. Ibid., p.63.
11. Ibid.
12. Ibid., p.66.
13. Ibid., p.462.
14. Ibid., p.1066.
15. Ibid., p.1068.
16. Ibid., p.1067.
17. Ibid., p.119.

**Bibliography**

1. Karunanidhi, Mu. Kalaignar's Poetry Rain. Chennai: Seethai Pathippagam, 3rd Edition, 2016.

2. Santhanam, S. Educational Psychology. Chennai: Shantha Publishers, 4th Edition, 2014.
3. Bala. Pioneers of Tamil Modernism. Thanjavur: Annam Publications, 2007.
4. Murugusundaram, Ti. Modern Poetry. Thanjavur: Tamil University, 2005.
5. Vellaivaaranan, K. (Ed.), Professor (Commentary), Tholkappiyam Meippattiyal Commentary Wealth. Madurai: Publication Division, Madurai Kamaraj University, 1986.

# கலைஞர் மு.கருணாநிதியின் கவிதைகளில் அழுகை உணர்ச்சி

***செ. எழில்வளவன்***
முனைவர் பட்ட ஆய்வாளர்
பதிவு எண்: BDU 2320632780286
மன்னர் சரபோசி அரசுக் கல்லூரி (தன்னாட்சி), தஞ்சாவூர்

***சோ. கண்ணதாசன்***
இணைப் பேராசிரியர், தமிழ்த்துறை
மன்னர் சரபோசி அரசுக் கல்லூரி (தன்னாட்சி), தஞ்சாவூர்

***முன்னுரை***
*கவிதைப் படைப்புகளில் படைப்பாளனின் உணர்ச்சியும் அப்படைப்பில் இடம்பெறும் மாந்தர்களின் உணர்ச்சியும் முதன்மையாக இடம்பெறுகின்றன. கவிதையின் உணர்த்துமுறையில் தானே அல்லது மாந்தரின் வழியே கலைஞன் வெளிப்படுத்தும் உணர்ச்சியே அவன் கவிதையைச் சுவைஞர்களிடம் கொண்டு சேர்க்கிறது. எனவே தான் கவிதையில் அமையும் உணர்ச்சி வெளிப்பாடு, அக்கவிதையின் உயிராக அமைகிறது என்பர். இக்கட்டுரை கலைஞர் மு.கருணாநிதி, தம் கவிதைகளில் வெளிப்படுத்தியுள்ள அழுகை உணர்ச்சி பற்றி ஆராய்ந்து விளக்குகிறது.*
***கலைச்சொற்கள்:*** *பாடுபொருள், மனப்பதிவுகள், சமூகக் குமுறல்கள், அகவயக் குமுறல்கள், அவலித்தல், கழிவிரக்கம், பிரிவுத்துயர், திறனாய்வு, கலைஞர் மு.கருணாநிதி.*

கவிதையில் உணர்ச்சியின் முக்கியத்துவத்தைப் பற்றி விளக்கும் அறிஞர்கள் ஒரு சிறந்த கவிஞனுக்குக் கூர்மையான சிந்தனையும் உணர்ச்சியும்தான் முக்கியமென்றும், புலமை இரண்டாம் தரமானதென்றும் குறிப்பிடுவதுடன், கவிதைக்கு ஆழத்தைக் கொடுப்பது அதில் அமைந்திருக்கும் உணர்ச்சியே என்றும் மொழிகின்றனர்.

> **சிந்தனை எதுவுமின்றி கற்பனை வளமும் கலையுணர்ச்சியும் இல்லாமல், கல்லை அடுக்குவதுபோலச் சொற்களை அடுக்குவது கவிதையாகாது**[1]

என்னும் கூற்று படைப்பாளனால் சொற்கள், மொழிநடை உள்ளிட்டவற்றில் காட்டப்படும் புலமையைவிட அவன் படைப்பில் இடம்பெறும் உணர்ச்சியே முதன்மையானது என்பதை வலியுறுத்துகிறது. மேலும் உணர்ச்சி வெளிப்பாடே கவிதையின் முதன்மையான பண்பு என்பதை,

> **எத்தகு கருத்தாயினும் எத்தகு உவமையாயினும் அதைச் செம்மையான யாப்பு வழியில், உணர்ச்சி குன்றாமல் கேட்போர் உள்ளத்தில், அத்தகைய உணர்ச்சி தோன்றும்படி பாடுகின்ற ஆற்றலே கவிதையின் இயல்பு**[2]

என்னும் கருத்தும் உறுதி செய்கிறது.

## உணர்ச்சி தோன்றும் சூழல்

கவிதையின் வடிவம், பாடுபொருள் எத்துணை சிறப்பானதாக அமைந்தாலும், அக்கவிதையின் நிலைப்புத்தன்மைக்கு, அதில் இடம்பெற்றிருக்கும் உணர்ச்சியே காரணமாகிறது. அதனால்தான் இலக்கியங்கள் அவற்றில் இடம்பெற்றுள்ள

உணர்ச்சி வெளிப்பாட்டால் காலங் கடந்தும் வாழ்கின்றன.

கவிஞனின் மனப்பதிவுகள் கருவாகி வளர்ந்து, உணர்ச்சி என்னும் வாயில் கிடைத்தவுடன், கவிதைக் குழந்தைகளாகப் பிறக்கின்றன.

மனிதனிடத்துக் காணப்படும் அறிவு, உணர்ச்சி என்ற இரண்டனுள்ளும் உணர்ச்சியை அடிப்படையாகக் கொண்டே கவிதை பிறக்கிறது என்று கூறும் திறனாய்வாளர்கள், அறிவைப்போல உணர்ச்சி ஆராய்ச்சிக்கு உட்படுவதில்லை என்பதால், கவிதையின் உண்மையான இயல்பை உணர வேண்டுமாயின், கவிதை வெளிப்படுத்தும் உணர்ச்சியைஅனுபவித்துக்காணவேண்டும் என்பர். எனவேஉணர்ச்சிதோன்றும்சூழலில் கவிதையும் தோன்றுகிறது எனலாம்.

**உணர்ச்சிகளாக மாறும் கவிதைப் பாடுபொருள்**

தம்மைச் சுற்றி நடப்பவற்றைத் தம்மோடு தொடர்புடையனவாகவும் தம்முடையனவாகவும் கருதி, அவற்றைத் தம் அனுபவ உணர்வுகளாகக் கவிஞர்கள் ஆக்கிக் கொள்கின்றனர். மேலும் அவற்றை மேலெழுந்தவாரியாகத் தம் மனதில் ஊடுருவிச் செல்வதாக நினைக்கின்றனர். எனவே பொதுவாக சமூகக் குமுறல்களே அகவயக் குமுறல்களாக உருமாற்றம் பெற்று கவிதைகளாக ஆகின்றன. அதனால் கவிஞர்கள் தம் உணர்ச்சியிலிருந்து மட்டுமன்றி, பிறருடைய உணர்ச்சிகளிலிருந்தும் கவிதைகளைப் படைக்கின்றனர் என்பதை அறியலாம்.

**கலைஞர் மு.கருணாநிதியின் கவிதைகளில் அழுகை உணர்ச்சி**

கலைஞர் மு.கருணாநிதியின் கவிதைகள் அனைத்தும் "கலைஞரின் கவிதை மழை" என்னும் பெயரில் தொகுக்கப்பட்டுள்ளன. இக்கவிதைகளில் அமைந்துள்ள உணர்ச்சி வெளிப்பாடு படைப்பாளியின் எண்ணங்களை அப்படியே பிரதிபலிப்பதாகவும் மாந்தர்களின் எண்ணங்களைப் பிரதிபலிப்பதாகவும் அமைந்துள்ளது.

> **காதல், வீரம், கொடை, தியாகம், சோகம், கோபம், தாய்மை முதலிய உணர்வுகள் என்றும் மாறியோ மதிப்பிழந்தோ போய்விடுவதில்லை. இவற்றைப் புலப்படுத்தும் - வெளிப்படுத்தும் இலக்கியங்கள் என்றும் வரவேற்பு பெறுவது அழியாப் புகழுடன் நிற்கும்**[3]

என்னும் கூற்றுக்கிணங்க கலைஞரின் கவிதைகள் உணர்ச்சிகளின் பெட்டகமாக அமைந்துள்ளன.

தொல்காப்பியர் தம் மெய்ப்பாட்டியலில்,

> **நகையே அழுகை இளிவரல் மருட்கை**
> **அச்சம் பெருமிதம் வெகுளி உவகையென்று**
> **அப்பால் எட்டே மெய்ப்பா டென்ப**[4]

என்று கூறும் எண்வகை மெய்ப்பாடுகளுள் அழுகை உணர்ச்சி இரண்டாவதாக இடம்பெற்றுள்ளது. இதற்குப் பேராசிரியர்,

> **அழுகை என்பது அவலம்; அஃது இரு வகைப்படும். தானே அவலித்தலும் பிறரவலங்கண்டு அவலித்தலுமென**[5]

என்று உரை வரைந்துள்ளார்.

> **தானே அவலித்தவாறு தான் துன்புற்று அழுதல். இது அழுகையெனப்படும். பிறர் அவலங்கண்டு அவலித்தலாவது பிறருற்ற துன்பத்தினைக் கண்டு உள்ளம் இரங்கித் தான் அழுதல். இது கருணை எனப்படும். இவ்வாறு இயற்றமிழ் கூறும் எண்வகைச் சுவைகளுள் அழுகையென்பதொன்றே அழுகையெனவும் கருணை எனவும் இரண்டாய்ச் சுவை ஒன்பதாகலும் உடைய என்பதாம்**[6]

எனும்உரைவிளக்கத்திலிருந்து பிறர்துன்பம் கண்டு உருகுதல் அழுகை உணர்ச்சியில் அமையாது என்பதையும் தானே துன்புற்று அழுவதே அழுகை என்பதையும் அறிய முடிகிறது. இவ்வழுகை உணர்ச்சி

**நெருங்கியோர் இறப்பு, உடல் நலிவு, தோல்வி, ஏமாற்றம், விரும்பியது நடக்காமல் போதல் போன்றவை உள்ளத்தைத் தாக்குகின்ற போதும் மனிதரிடம் தோன்றுகிறது[7]**

என்று உளவியலாளர் கூறுவர்.

கலைஞர் மு.கருணாநிதியின் கவிதைகளில் வெளிப்படும் அழுகை உணர்ச்சி பிறர் மறைவில் அவருக்கு வெளிப்பட்ட அவல உணர்ச்சியாகவே அமைந்துள்ளது. ஏ.டி.பன்னீர் செல்வம், நேரு, கலைவாணர், கண்ணதாசன், ஜீவா, ஜி.கே.மூப்பனார், முரசொலி மாறன் போன்றோர் மறைவின் போது கலைஞரால் எழுதப்பட்டுள்ள கவிதைகளில் அழுகை உணர்ச்சி மேலோங்கி வெளிப்பட்டுள்ளதை அறியமுடிகிறது. இவை அனைத்துக்கும் மேலாக அண்ணா மறைந்தபோது கலைஞர் எழுதிய கவிதைகள் அழுகை உணர்ச்சி கழிவிரக்கத்துடன் வெளிப்படுத்துவதை அறியலாம்.

### ஏ.டி.பன்னீர் செல்வம் மறைவு

திராவிடத் தளபதி என்று போற்றப்படும் ஏ.டி.பன்னீர் செல்வம், வானூர்தி விபத்தொன்றில் உயிர் நீத்தபோது அவரின் பிரிவுத்துயர் தாங்காது கலைஞரிடமிருந்து வெளிப்பட்ட கவிதை வரிகள் அழுகை உணர்ச்சிக் கடலில் படிப்பவரை ஆழ்த்தும் தன்மைமிக்கவை. சான்றாக,

**பன்னீர் செல்வமே! உன் பால்வடியும்
முகமெங்கே? பாண்டியன் மீசை யெங்கே?
பசியேறிய வெறிக் கடலின் பாழலைகள்
ஓய்ந்தனவா உனைத் தின்று![8]**

என்னும் வரிகளைச் சுட்டலாம்.

### நேரு மறைவு

ஜவஹர்லால் நேருவின் மொழிக்கொள்கை உள்ளிட்டவற்றில் தமக்குக் கருத்து வேறுபாடுகள் இருப்பினும், நவீன இந்தியாவை வடிவமைத்த சிற்பி என்ற நிலையில் அவருடைய மறைவை ஆற்றாமல், கலைஞர் எழுதிய இரங்கற் கவிதை அழுகை உணர்ச்சியை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளதை,

**பூமானே! புகழ்க்குன்றே! போனாயோ என்தலைவா?
கோமானே! கொள்கை வேந்தே! உன்னைக்
கொள்ளையிட்ட கூற்றெங்கே?[9]**

என்னும் வரிகள் வெளிப்படுத்துகின்றன. கவிதையின் இறுதியில் இடம்பெற்றுள்ள கொள்ளையிட்ட கூற்று என்னும் தொடர், கலைஞரின் அழுகை உணர்ச்சியின் உச்சத்தை எடுத்துக்காட்டுகிறது.

### கலைவாணர் மறைவு

தம் நகைச்சுவை நடிப்பு காரணமாகத் திரைச் சுவைஞர்களில் கலைவாணர் என்று போற்றப்பட்ட என்.எஸ்.கிருஷ்ணன் மறைவின்போது பிரிவுத்துயர் ஆற்றாமல், கலைஞர் வடித்த இரங்கற் கவிதையில் அழுகை உணர்ச்சி பீறிடுகிறது.

**பொன்மலையைக் குவித்திட்டேன்; இன்று புழுதிமலை
அடிவாரத்தில் கிடக்கின்றேன் எனச் சொல்லிப்
புகழ்மலையின் உச்சிக்குப் போனாயோ?[10]**

என்றும்,

**பொது உடைமை முளைக்கின்ற ருசியாவில்
கலைப் பயணம் நடத்துதற்குச் சென்றாயே;
அதுபோல எண்ணமிட்டோ பெரும் பயணம் மேற்கொண்டாய்[11]**

என்றும் அமைந்துள்ள கவிதை வரிகளில் கலைவாணரின் வாழ்க்கை நினைவுகள் அழுகை உணர்ச்சியுடன் போற்றப்படுகின்றன.

### ஜீவா மறைவு

பொதுவுடைமைக் கட்சியின் தலைவராகத் திகழ்ந்த ஜீவா, தமிழகம் போற்றிய சிறந்த பேச்சாளர். எளிய வாழ்வு நடத்தியவர். இவருடைய மறைவின் துயரை கலைஞர் பின்வருமாறு பாடியுள்ளார்.

**குருதியெலாம் புரட்சி மணம்
கமழுகின்ற வரிப்புலியைக்
கொள்கையிலே உறுதிகொண்ட**

**தமிழ்க் கவியைக்**
**கொள்ளையடித்து மகிழ்ந்ததோ**
**கொடுஞ்சாவு?[12]**

### கண்ணதாசன் மறைவு

கவியரசர் கண்ணதாசன் கவிதைத் துறையில் மட்டுமன்றி, அரசியல் துறையிலும் தம் சுவடுகளைப் பதித்தவர்; பல்வேறு கட்சிகளிலும் மாறி மாறி தன்னை இணைத்துக்கொண்டவர்; திரைப்படப் பாடல்கள் மூலம் புகழடைந்தவர்.

**கண்ணதாசனின் மறைவை,**
**கைநீட்டிக் கொஞ்சுவோர் பக்கமெல்லாம்**
**கரம் நீட்டித் தாவுகின்ற குழந்தை நீ**
**கல்லறைப் பெண்ணின் மடியினிலும்**
**அப்படித்தான் தாவி விட்டாயோ;**
**அமைதிப்பால் அருந்தித் தூங்கிவிட![13]**

என்று குறிப்பிடும் கலைஞரின் கவிதை வரிகளில் அழுகை உணர்ச்சி கொப்பளிப்பதை அறியமுடிகிறது.

### முரசொலிமாறன் மறைவு

தமக்குச் சிறந்த அரசியல் ஆலோசகராகவும் உறவினராகவும் திகழ்ந்த முரசொலிமாறன் மறைவு கலைஞரைத் தனிப்பட்ட முறையில் மிகுதியும் பாதித்தது. என் மனச்சான்று என்று கலைஞரால் புகழப்பட முரசொலிமாறனின் மறைவின் போது, தாம் எழுதிய கவிதை வரிகளில் அவருடனான தம் நினைவுகளைக் கூறும் போது முரசொலிமாறனின் பண்புகளை,

**கன்றாக இருந்தபோதே குன்றாத கொள்கை வளம்**
**கொண்டிருந்த மாறன்[14]**

என்றும்,

**நாடி நரம்புகளில் ஓடுகின்ற குருதிப் புனலாக**
**நாசியில் இழைகின்ற சுவாசமாக**
**நான் வளர்த்த தங்கம் மாறன்[15]**

என்றும் வெளிப்படுத்தியுள்ளார்.

### அண்ணாவின் மறைவு

கலைஞர் மு.கருணாநிதி எழுதியுள்ள கவிதைகளில் அழுகை உணர்ச்சியின் சிகரமாக, அண்ணா மறைந்தபோது அவருடைய நினைவைப் போற்றி எழுதப்பட்ட நீண்ட கவிதை குறிப்பிடத்தக்கதாகும். கலைஞரால் படிக்கப்பட்டு சென்னை வானொலி நிலையத்தால் அக்கவிதை ஒலிபரப்பும் செய்யப்பட்டது. அந்நீள்கவிதையில் இடம்பெற்றுள்ள,

**அண்ணனுக்கோர் சிலை**
**சென்னையிலே வைத்தபோது . . .**
**ஆள்காட்டி விரல் மட்டும் காட்டி நின்றார் . . .**
**ஆணையிடுகின்றார் எம் அண்ணா என்றிருந்தோம்**
**அய்யகோ, இன்னும்**
**ஓராண்டே வாழப் போகிறேன் என்று அவர்**
**ஒரு விரல் காட்டியது இன்றன்றோ புரிகிறது![16]**

என்னும் வரிகளில் அண்ணாவின் சிலையுடன் அவருடைய மறைவைத் தொடர்புபடுத்தி, அழுகை உணர்ச்சியைக் கற்பனை பீறிடக் கலைஞர் எழுதியுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

### குமணவள்ளல் சோகம்

பிறர் மறைவு மட்டுமன்றி, இரத்த உறவுகளுடனான உறவுச் சிக்கல்களிலும் அழுகை உணர்ச்சி ஆட்கொள்வதை கடையேழு வள்ளல்களுள் ஒருவனாகிய குமணவள்ளலின் தம்பி இளங்குமணன் என்பவன், தன் அண்ணனிடம் தமக்குரிய பங்கைப் பிரித்துத் தருமாறு கேட்டபோது, குமணவள்ளலின் உணர்ச்சியை அழுகை உணர்ச்சியாகவே கலைஞர் பின்வருமாறு காட்டுகிறார்.

**அணிமணிகள் எவை வேண்டும் உனக்கு?**
**அரண்மனையில் எது வேண்டும்?**
**ஆனையென்ன? சேனையென்ன?**
**அனைத்தையுமே எடுத்துக்கொள்**

**அண்ணனுக்குத் தம்பியென்ற அன்பை மட்டும்**
**கொடுத்துவிடு எனச் சொல்லி**
**அழுதுவிட்டான் குமணவள்ளல்**[17]

மேற்கண்ட கவிதை வரிகளில் இடம்பெற்றுள்ள அண்ணனுக்குத் தம்பியென்ற அன்பை மட்டும் கொடுத்து விடு என்னும் தொடர் அழுகை உணர்ச்சியின் வெளிப்பாட்டுக்கு உரிய குறியீடாக அமைந்துள்ளதை அறியலாம்.

கலைஞர் மு.கருணாநிதியின் கவிதைகளில் அழுகை உணர்ச்சியை வெளிப்படுத்தும் பெரும்பாலான கவிதைகள், அவை பிரிவுத்துயரின் ஆற்றாமையிலிருந்து வெளிப்பட்டவையாக அமைந்துள்ளன. பிரிவுத்துயரின் வெம்மையை மிகச் சாதாரணமானச் சொற்களில் பேசுபவையாக மட்டும் அன்றி, மறைந்தவர்களுடன் கலைஞருக்கிருந்த அன்பையும் நட்பையும் உறவையும் படைப்பாளன் நினைவுபடுத்திப் பேசும் நெகிழ்ச்சிமிக்க கவிதைகளாகவும் அவை விளங்குவதைப் படிப்போரால் எளிதில் அறிய முடியும்.

## தொகுப்புரை

- கவிதைப் படைப்பில் உருவம், உள்ளடக்கம் போன்றவற்றில் சொற்கள், மொழிநடை போன்றவற்றின் மூலம் படைப்பாளன் வெளிப்படுத்தும் புலமையைவிட, அப்படைப்பில் இடம்பெறும் உணர்ச்சியே முதன்மையான பங்கு வகிக்கிறது.
- கவிஞனின் மனப்பதிவுகளே கருவாகி வளர்ந்து உணர்ச்சி என்னும் வாயில் கிடைத்தவுடன், கவிதைக் குழந்தைகளாகப் பிறக்கின்றன.
- கலைஞனின் எண்ணமும் சொல்லாற்றலுமே உணர்ச்சியைப் போர்த்திக் கொண்டு கவிதைகளாக வெளிப்படுகின்றன.
- அழுகை உணர்ச்சியை வெளிப்படுத்தும் கலைஞரின் பெரும்பாலான கவிதைகள், அவரால் பெரிதும் போற்றப்பட்டவர்களும் அவரைக் கவர்ந்தவர்களும் மறைந்த போது அவர்கள் மறைவின் பிரிவுத்துயர் ஆற்றாமையிலிருந்து வெளிப்பட்டவையாக அமைந்துள்ளன.

## சான்றெண் குறிப்புகள்

1. தி.முருகுசுந்தரம், நவீன கவிதை, ப.27.
2. மேலது., ப.28.
3. பாலா, தமிழ் நவீனத்துவத்தின் முன்னோடிகள், ப.166.
4. க.வெள்ளைவாரணன் (ப.ஆ.), பேராசிரியர் (உரை), தொல்காப்பியம் மெய்ப்பாட்டியல் உரை வளம், நூ.2, ப.2.
5. மேலது.
6. மேலது.
7. எஸ்.சந்தானம், கல்வி உளவியல், ப.63.
8. கலைஞர் மு.கருணாநிதி, கலைஞரின் கவிதை மழை, ப.21.
9. மேலது., ப.303.
10. மேலது., ப.63.
11. மேலது.
12. மேலது., ப.66.
13. மேலது., ப.462.
14. மேலது., ப.1066.
15. மேலது., ப.1068.
16. மேலது., ப.1067.
17. மேலது., ப.119.

## துணைநூற் பட்டியல்

1. கருணாநிதி, மு. கலைஞரின் கவிதை மழை. சென்னை: சீதை பதிப்பகம், 3 ஆம் பதிப்பு, 2016.
2. சந்தானம், எஸ். கல்வி உளவியல். சென்னை: சாந்தா பப்ளிஷர்ஸ், 4 ஆம் பதிப்பு, 2014.
3. பாலா. தமிழ் நவீனத்துவத்தின் முன்னோடிகள். தஞ்சாவூர்: அன்னம் வெளியீடு, 2007.

4. முருகுசுந்தரம், தி. நவீன கவிதை. தஞ்சாவூர்: தமிழ்ப் பல்கலைக்கழகம், 2005.

5. வெள்ளைவாரணன், க. (ப.ஆ.), பேராசிரியர் (உரை), தொல்காப்பியம் மெய்ப்பாட்டியல் உரை வளம். மதுரை: பதிப்புத்துறை, மதுரை காமராசர் பல்கலைக்கழகம், 1986.